நியதி நிபந்தனைகள்

1. <u>வரைவிலக்கம்</u>

"உறுப்பாண்மை சன்மானங்கள்" என்பது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியால் தகுதிவாய்ந்த அட்டை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உறுப்பாண்மை சன்மான நிகழ்ச்சித்திட்டம் எனப் பொருள்படும். "அட்டை உறுப்பினர்" என்பது, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியால் வழங்கப்பட்ட அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டையொன்றை வைத்திருக்கும் ஒருவர் எனப் பொருள்படும். "சேர்த்துக்கொள்ளப்படும் திகதி" என்பது அடிக்கடி நிகழாத பிரயாணி விருப்புத் தெரிவு உறுப்பாண்மை சன்மானத்தில் அல்லது அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத் தெரிவு உறுப்பாண்மை சன்மானத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான விண்ணப்பத்தை வங்கி பெற்றுக்கொள்ளும் மாதத்தின் முதல் நாள் என்று பொருள்படும். "சேர்த்துக்கொள்ளப்படும் ஆண்டு" என்பது, நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் திகதியன்று தொடங்கும் பன்னிரண்டு மாதங்களைக்கொண்டவொரு காலப்பகுதி எனவும் அதன்பின்னர் அடுத்துவரும் பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதி எனவும் பொருள்படும். "அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டம்" என்பது பங்குபற்றும் உலகளாவிய பங்காளர் நிகழ்ச்சித்திட்டம் எனப் பொருள்படும். "அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத் தெரிவு" என்பது நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அடிக்கடி நிகழும் பிரயாணி சன்மானங்களை மீட்பதற்கான விருப்புத் தெரிவு எனப் பொருள்படும். "அடிக்கடி நிகழும் பிரயாணி சன்மானங்கள்" என்பது, புள்ளிகளை அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாற்றுவதன்மூலம் பெறப்படும் சன்மானங்கள் எனவும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சன்மானங்கள் எனவும் பொருள்படும். "இனங்காணப்பட்ட கணக்குகள்" என்பது, புள்ளிகளைத் திரட்டும் நோக்கத்திற்கு முதனிலை அட்டை உறுப்பினர் ஒருவரால் வைத்திருக்கப்படும் தகுதிவாய்ந்த எல்லா அட்டைக் கணக்குகளும் எனப் பொருள்படும். "அடிக்கடி நிகழாத பிரயாணி சன்மானங்கள்" என்பது அடிக்கடி நிகழும் பிரயாணி சன்மானங்களைத் தவிர, பொருட் கொள்வனவு, உணவருந்துதல், களியாட்டம், நிதியியல் சேவைகள், உள்ளூர்ப்பிரயாணம் என்பன உட்பட, நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் அனைத்துச் சன்மானங்களும் எனவும் இணையற்ற அனுபவம் சார்ந்த சன்மானம் எனவும் காலத்துக்குக்காலம் சேர்க்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சன்மானங்கள் எனவும் பொருள்படும். "புள்ளிகள்" என்பது, உறுப்பாண்மை சன்மானங்களின் புள்ளிகள் எனப் பொருள்படும். "நிகழ்ச்சித்திட்டம்" என்பது, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உறுப்பாண்மை சன்மானங்கள் நிகழ்ச்சித்திட்டம் எனப் பொருள்படுவதுடன் அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத் தெரிவு, அடிக்கடி நிகழாத பிரயாணி விருப்புத்தெரிவு ஆகிய இரண்டையும் உள்ளடக்கும். "நிகழ்ச்சித்திட்டக்

கணக்கு" என்பது, அட்டை உறுப்பினர் ஒருவரின் உறுப்பாண்மை சன்மானங்கள் நிகழ்ச்சித்திட்டக் கணக்கு எனப் பொருள்படும்.

## 2. தகுதியும் சேர்த்துக்கொள்ளப்படுதலும்

2.1 நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியால் வழங்கப்படும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டை உறுப்பினர்களின் எல்லா அட்டைகளும் மட்டுமே (அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் புளு கிறடிட் அட்டை, கோப்பரேட் அட்டைகள், மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி ஜோன் கீல்ஸ் குரூப் எப்பினிற்றி அட்டை என்பன புறநீங்கலாக) உறுப்பாண்மை சன்மானங்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்குத் தகுதியுடையனவாகும்.

2.2 தகுதியுடைய அட்டை உறுப்பினர்கள் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உறுப்பாண்மை சன்மானங்கள் அடிக்கடி நிகழாத பிரயாணி விருப்புத்தெரிவு மற்றும் அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத் தெரிவு என்பவற்றிற்குத் தன்னாலேயே சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

2.3 அட்டை உறுப்பினர்கள் (001)4414141 என்னும் 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவை விசேட இணைப்பின் ஊடாக அழைப்பதன்மூலம் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உறுப்பாண்மை சன்மானங்கள் அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத் தெரிவிலும் அடிக்கடி நிகழாத பிரயாணி விருப்புத் தெரிவிலும் சேர்த்துக்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

2.4 சேர்த்துக்கொள்ளப்படும் திகதியன்று அட்டைக் கணக்குகள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையனவாகும்.

## 3. கட்டணங்கள்

3.1 உறுப்பாண்மை சன்மானங்கள் அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத்தெரிவின் உறுப்பாண்மையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு ரூபா 500 ஆண்டுக்கட்டணமொன்று அறவிடப்படும்.

3.2 நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கான கட்டணம் வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு அட்டை உறுப்பினர்களுக்கு காலத்துக்குக்காலம் அறிவிக்கப்படும்.

## 4. புள்ளிகள் திரளுதல்

(அடிக்கடி நிகழும் பிரயாணி விருப்புத் தெரிவு, அடிக்கடி நிகழாத பிரயாணி விருப்புத் தெரிவு ஆகிய இரண்டிற்கும் ஏற்புடைத்தாகும்).

4.1 ஊக்குவிப்புச் சலுகைகளுக்குத் தவிர அட்டை உறுப்பினர்கள் உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கிரடிட் அட்டை ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு முனையிலும் எல்லா காசு முற்பணங்கள், கிறடிட் அட்டை வசதிகளுக்கான கட்டணங்கள், அறவீடுகள் என்பன புறநீங்கலாக தங்கள் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கிறடிட் அட்டையின்மீது செலவிடப்படும் ஒவ்வொரு 100/ஸ்ரீ ரூபாவுக்கும் ஒரு புள்ளியை ஈட்டலாம்.

4.2 திருப்பிக் கொடுக்கப்படும் பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் நெகிழுகின்ற அல்லது விலைப்பட்டியலிடும் பிணக்குகளிலிருந்தெழும் எவையேனும் கடன்கள் இருப்பின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கில் ஈட்டப்படும் புள்ளிகளுக்கு சீராக்கங்கள் செய்யப்படும்.

4.3 நிகழ்ச்சித்திட்டம் கணக்கின்மீது திரளும் புள்ளிகள் அட்டை உறுப்பினரின் சொத்தல்ல என்பதுடன் சட்டத்தின் நடைமுறையிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படக்கூடியதுமல்ல. அது பங்கேற்கும் அடிக்கடி நிகழும் பிரயாணி பங்காளர்கள் எவருக்கும் அல்லது ஏற்புடைத்தான மாற்றுதல் வீதப்படி அட்டை உறுப்பினரின் நெக்சஸ் (நேஒரள) கணக்கிற்கு மட்டுமே மாற்றப்படலாம்.

4.4 நிகழ்ச்சித்திட்டக் கணக்கில் திரளும் புள்ளிகள் காசு அல்லது நாணயப் பெறுமதியுடையவையல்ல.

## 5. புள்ளிகள் முடிவுறுதல்

நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கும்பொழுது ஈட்டப்படும் புள்ளிகளுக்கு முடிவு திகதி எதுவுமில்லை. ஆயினும் ஏற்கனவே திரண்டிருக்கும் அல்லது இதன்பின்னர் திரளவிருக்கும் புள்ளிகளுக்கு முடிவு திகதியொன்றை நிர்ணயிக்கும் உரிமை வங்கிக்குண்டு.

6. <u>திரண்டிருக்கும் புள்ளிகள் பற்றிய அறிவித்தல்</u>

அட்டைக் கூற்றின் திகதியன்றுள்ளவாறு திரண்டிருக்கும் புள்ளிகள் பற்றி மாதாந்தக் கணக்குக்கூற்றின் ஊடாக வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிக்கும். அட்டை உறுப்பினர்கள் அவர்களது கடைசிக் கணக்குக் கூற்றிலுள்ளவாறான புள்ளிகளை மீட்டுப்பெறலாம்.

7. <u>புள்ளிகளை மீட்டுப்பெறுதல்</u>

7.1 நல்ல நிலையிலுள்ள அட்டைக் கணக்குகள் மட்டுமே (உதாரணம்: நெறி தவறாமை) மீட்டுப் பெறுவதற்குத் தகுதியுடையதாதல் வேண்டும்.

7.2 புள்ளிகளை (011) 4414141 என்ற 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவை விசேட இலக்கத்திற்கு அழைப்பதன்மூலம் அல்லது (011)414142 என்னும் இலக்கத்திற்கு தொலைநகல் ஒன்றை அனுப்புவதன்மூலம் மீட்டுப்பெறலாம். அட்டை உறுப்பினர்கள் தங்கள் கடைசிக் கணக்குக் கூற்றில் உள்ளவாறான புள்ளிகளை மட்டுமே மீட்டுப்பெறலாம்.

7.3 வங்கியுடன் தொடர்புகொள்வதன் மீது அட்டை உறுப்பினராக இனம்காணப்படுவதற்குப் போதியளவு தகவலை வழங்குமாறு அழைத்தவர் தேவைப்படுத்தப்படுவார். ஆளடையாளம் பரிசீலனை செய்யப்பட்டதன்மீது வெகுமதி உறுதிச்சீட்டொன்று வங்கியால் அட்டை உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

7.4 மீட்டுப்பெறல் இடம்பெறும்போது மீட்டுப்பெறப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கை அட்டை உறுப்பினரின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிலிருந்து கழிக்கப்படும். அத்துடன் அன்பளிப்பு உறுதிச்சீட்டொன்று அட்டை உறுப்பினருக்கு அல்லது அவரது நியமத்தருக்கு அனுப்பிவைக்கப்படும்.

7.5 அன்பளிப்பு உறுதிச்சீட்டுகள் ஒப்படைத்தூதர் சேவை (Courier) ஊடாக செய்யப்படும் ஒப்படைப்புகளுக்கு வங்கி பொறுப்பளிக்கமாட்டாது.

7.6 அட்டை உறுப்பினர் மீட்டுப் பெறப்பட்ட அன்பளிப்பு உறுதிச் சீட்டுகளைத் தாம் விரும்பும் எவரேனும் ஆளுக்கு கைமாற்றலாம். வங்கியால் வழங்கப்பட்டு வங்கியின் கரும பீடத்திலிருந்து அட்டை உறுப்பினரால் அல்லது அவரது நியமத்தரால் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அல்லது உறுதிச்சீட்டு அஞ்சல் செய்யப்பட்ட பின்னர் அல்லது ஒப்படைக்கப்படுவதற்கென ஒப்படைப்புத் தூதருக்குக் கையளிக்கப்பட்ட பின்னர் வங்கி எதுவிதத்திலும் பொறுப்பேற்கவோ பொறுப்புடையதாகவோ மாட்டாது.

காணாமற்போன அல்லது களவுபோன உறுதிச்சீட்டுகளுக்கு வங்கி பொறுப்பளியாகமாட்டாது.

7.7 அட்டை உறுப்பினர் அல்லது அவரது நியமத்தர் காட்டப்படும் உற்பத்திப் பொருளை மீட்டுப் பெறுவதற்கு/சேவையைத் துய்ப்பதற்கு உறுதிச்சீட்டை உறுப்பாண்மை சன்மானங்கள் வணிகர் நிலையத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.8 விதித்துரைக்கப்பட்ட செல்லுபடியாகும் காலப்பகுதிக்குள் உறுதிச்சீட்டு உறுப்பாண்மை சன்மானங்கள் பங்காளர் தாபனததில் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் வங்கி எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் பொறுப்புடையதாகமாட்டாது என்பதுடன் எவையேனும் பதிலீட்டு உறுதிச்சீட்டுகளை மீளவும் வழங்கவும் மாட்டாது.

7.9 மீட்டுப்பெறுதல் விருப்புத் தெரிவாக நிரற்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள்/சேவைகள் அவை கைவசமிருப்பதற்கு அமைவானதாகும். நிரற்படுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்கள்/சேவைகள் கைவசம் இல்லாமைக்கு வங்கி பொறுப்பாகமாட்டாது.

7.10 இந்த வழிகாட்டியில் மீட்டுப்பெறுதற் விருப்புத்தெரிவாக வழங்கப்படும் ஏதேனும் உற்பத்திப் பொருளை/சேவையை முன்னறிவித்தல் எதுவுமின்றி சேர்ப்பதற்கான அல்லது மாற்றீடு செய்வதற்கான உரிமை வங்கிக்குண்டு.

7.11 வங்கியானது வணிகர் விற்பனை முனை எவற்றிலும் மீட்டுப்பெறப்படும் எவையேனும் உற்பத்திப் பொருட்களின்/சேவைகளின் வழங்குநர் அல்ல. ஆதலால் அதற்கான உற்பத்திப் பொருளின்/சேவைகளின் தரம் தொடர்பில் ஏதேனும் பொறுப்பை ஏற்கமாட்டாது. குறிப்பிடப்பட்ட எவையேனும் ஹோட்டல்களில்/பிரயாண முகவர்களிடம்/விமான நிறுவனங்களிடம் இடவசதியை/ஆசனங்களை முன்கூட்டியே ஒதுக்குவதற்கு வங்கி பொறுப்பாளியாகமாட்டாது.

7.12 மீட்டுப்பெறுவதற்குத் தேவைப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை முன்னறிவித்தலின்றி மாற்றத்திற்கு அமைவானதாகும்.

7.13 மீட்டுப்பெறுதலுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டு அது முறைவழிப்படுத்தப்பட்டபின்னர் அதில் மாற்றங்கள் எவையும் அனுமதிக்கப்படமாட்டா.

7.14 மட்டுப்படுத்தப்பட்ட செல்லுபடிக் காலப்பகுதிக்குரிய வெகுமதி உறுதிச்சீட்டுக்களை வழங்கும் உரிமை வங்கிக்குண்டு.

7.15 கிடைக்கக்கூடிய மீட்டுப்பெறும் விருப்புத் தெரிவு www.americanexpress.lk என்னும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இணையத்தளத்தில் நிரற்படுத்தப்படும்.

## 8. அடிக்கடி நிகழாத பிரயாணி வெகுமதிகளை மீட்டுப்பெறுதல்

8.1 எல்லா வெகுமதிகளும் கிடைக்கக்கூடிய வாய்ப்பிற்கு அமைவானதாகும் என்பதுடன் குறித்தசில மட்டுப்பாடுகள் ஏற்புடைத்தாகலாம்.

8.2 ஏதேனும் வெகுமதி தொடர்பிலான மேலதிக உணவு, போக்குவரத்து அல்லது செய்யப்படும் இடவசதி ஏற்பாடுகள் அட்டை உறுப்பினரின் ஏகப் பொறுப்பாகும்.

8.3 வெகுமதியானது வெகுமதி உறுதிச்சீட்டின் வடிவிலிருந்து அட்டை உறுப்பினர் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை விஞ்சி பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்யுமிடத்து அட்டை உறுப்பினர் வித்தியாசப்படும் தொகையை பங்கேற்கும் சேவா நிலையத்திற்குக் கொடுப்பனவை செலுத்தித்தீர்த்தல் வேண்டும்.

## 9. அடிக்கடி நிகழும் பிரயாணி சன்மானங்களை மீட்டுப்பெறுதல்

9.1 புள்ளிகள் ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பங்குபற்றும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டங்களாக மாற்றப்படலாம்.

9.2 திரண்ட புள்ளிகளை ஏதேனும் பங்குபற்றும் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சித்திட்டங்களாக மாற்றுவதற்கு அட்டை உரிமையாளர் முதலில் ஏற்புடைத்தான நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்ந்து உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்ந்துகொள்வது அட்டை உறுப்பினரின் பொறுப்பாகும்.

9.3 புள்ளிகளை பங்குபற்றும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டங்களாக மாற்றம் செய்வது பங்குபற்றும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டப் பங்காளர்களிடையே வேறுபடும் என்பதுடன் வங்கியின் ஏக தற்றுணிபின்படி மாற்றத்திற்கு அமைவானதுமாகும்.

9.4 அட்டை உறுப்பினர்கள் தாங்கள் சேர்ந்துகொள்ளும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடைத்தான நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதல் வேண்டும் என்பதுடன் அவற்றுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

9.5 அட்டை உறுப்பினர் ஒருவரின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிலிருந்து பங்குபற்றும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டமாக மாற்றப்படும் புள்ளிகளுக்கோ அல்லது அதன் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டப் பங்காளர் தொடர்பில் அல்லது வேறுவகையில் ஏதேனும் பங்குபற்றும் விமானக் கம்பெனியின் அல்லது ஹோட்டலின் நடவடிக்கைகளுக்கோ வங்கி பொறுப்பேற்கமாட்டாது.

9.6 நிகழ்ச்சித்திட்டத்தில் ஏதேனும் விமானக் கம்பனியின் அல்லது ஹோட்டலின் பங்கேற்பானது அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி மாற்றத்திற்கு அமைவானதாகும்.

9.7 வங்கியின் கிறடிட் அட்டை பிரயாணி காப்புறுதி நலன்கள் அடிக்கடி நிகழும் பிரயாணி விமானப் பயணச் சீட்டுகளுடன் அல்லது மக்கினொன்ஸ் பிரயாணி உறுதிச்சீட்டுகளுடன் அட்டை உறுப்பினர் ஒருவரின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிலிருந்து மாற்றப்பட்ட புள்ளிகளைப் பயன்படுத்தி பெறப்பட்ட அடிக்கடி நிகழும் விமானப் பயணச் சீட்டுகள் உட்பட, மேற்கொள்ளப்படும் விமானப் பயணங்களுக்கு ஏற்புடைத்தாகமாட்டாது.

9.8 மக்கினொன்ஸ் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ட்ரவல் நிறுவனத்தில் மீட்டுப் பெறக்கூடிய பிரயாண உறுதிச்சீட்டுகள் தொடர்பில் பின்வரும் நியதி நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும்.

9.8.1 பிரயாண உறுதிச்சீட்டுகளை மக்கினொன்ஸ் ட்ரவல்ஸ் நிறுவனத்தில் மாத்திரமே மீட்டுப்பெறலாம் என்பதுடன் அது வழங்கப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

9.8.2 பிரயாண உறுதிச்சீட்டுகள் மீளளிக்கப்படவோ பணமாக மாற்றப்படவோ மாட்டாது; அல்லது ஏனைய ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் அல்லது சலுகைகளுடன் இணைத்துப் பயன்படுத்த முடியாது. மீட்டுப்பெறும் சலுகை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டையின் அத்துடன் அவற்றின் அந்தந்த தாபனங்களின் நியதி நிபந்தனைகளால் பிணிக்கப்பட்டுள்ளது.

9.8.3 பிரயாண உறுதிச்சீட்டைப் பயன்படுத்தி செய்யப்படும் பகுதிக் கொடுப்பனவின் விடயத்தில் மிகுதித்தொகை அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கிறடிட ் அட்டையைப் பயன்படுத்தி செலுத்தப்படுதல் வேண்டும்.

9.8.4 இரத்துச் செய்யப்பட்ட உரிமானப் பயணங்களின் அல்லது ஆசன ஒதுக்கங்களின் விடயத்தில் அட்டை உறுப்பினருக்கு வருமதியான கொடுப்பனவுகள் எவையுமிருப்பின் அவற்றிற்கு மக்கினொன்ஸ் ட்ரவல்ஸ் பொறுப்புடையதாகும்.

9.8.5 அட்டை உறுப்பினர்கள் பிரயாண உறுதிச்சீட்டைப் பயன்படுத்தித் தங்கள் பயணச்சீட்டை/பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்யுமிடத்து பிரயாணக் காப்புறுதிக்கு உரித்துடையவர்களாக மாட்டார்கள்.

9.8.6 அட்டை உறுப்பினர்கள் எவையேனும் (i) காப்புறுதி; (ii) விமான நிலைய மாற்றல் கட்டணங்கள்; (iii) விமான நிலைய வரிகள் அத்துடன் எரிபொருள் மிகை வரிகள்; அறவீடுகள் என்பவற்றிற்கு முற்றிலும் பொறுப்புடையவராவார்.

9.8.7 புள்ளிகளை ஏசியா மைல்ஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றும் விடயத்தில் அட்டை உறுப்பினர் ஒருவர் ஒரேயொரு மீட்டுப்பெறுதல் கொடுக்கல் வாங்கலுக்கு குறைந்தபட்சம் 1000 ஆசு புள்ளிகளையும் அதன்பின்னர் 100 புள்ளிகளின் மடங்கு தொகைகளிலும் மாற்றுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

## 10. <u>நிகழ்ச்சித்திட்டக் கணக்கு</u>

10.1 அட்டைக் கணக்கு அல்லது ஏதேனும் இணைப்புக் கணக்கு நல்ல நிலைமையில் (அதாவது நெறி தவறியிருப்பின்) அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டத்தில் அட்டை உறுப்பினரின் உறுப்பாண்மை இல்லாதொழிக்கப்படலாம் அல்லது நிகழ்ச்சித்திட்டக் கணக்கிலுள்ள புள்ளிகள் பறிமுதல் செய்யப்படலாம்.

10.2 அட்டை உறுப்பினர் அட்டைக் கணக்கை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை ஆட்சிசெய்யும் நியதி நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தவறுவதன் காரணமாகவும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டத்தில் அட்டை உறுப்பினரின் உறுப்பாண்மை இல்லாதொழிக்கப்படலாம் அல்லது திரண்டிருக்கும் புள்ளிகள் பறிமுதல் செய்யப்படலாம்.

10.3 அட்டை உறுப்பினரொருவர் எல்லா முதனிலை அட்டைகளையும் இல்லாதொழிப்பாராயின் அல்லது ஏதேனும் காரணத்திற்காக வங்கி ஏதேனும் இணைக்கப்பட்ட கணக்கை (கணக்குகளை) இல்லாதொழிக்குமாயின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கில் திரண்டிருக்கும் எவையேனும் புள்ளிகள் வங்கியின் தற்றுணிபின்பேரில் இடைநிறுத்தப்படுவதுடன் மாற்றப்படும் அல்லது மீட்டுப்பெறப்படும் ஆற்றல் இல்லாதுமிருக்கும். அட்டை உறுப்பினர் ஏதேனும் அட்டைக் கணக்கை இல்லாதொழிக்கப்பட்ட ஒரு ஆண்டிற்குள் மீண்டும் நிலைநாட்டினால் அல்லது வங்கி இணைக்கப்பட்ட கணக்குகளை மீண்டும் நிலைநாட்டினால் அட்டை உறுப்பினரின் நிகழ்ச்சித்திட்டத்தின் நியதி நிபந்தனைகளுக்கமைய அட்டை உறுப்பினரின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிலுள்ள எவையேனும் புள்ளிகள் பங்குபற்றும் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சித்திட்டமொன்றுக்க மாற்றப்படலாம் அல்லது சன்மானங்களுக்கு மீட்டுப்பெறலாம்.

10.4 ஒன்றுக்கு மேற்பட்ட முதனிலை அட்டைக் கணக்கை வைத்திருப்பவரான தகுதியுள்ள அட்டை உறுப்பினர் ஒருவர் ஏதேனும் அத்தகைய அட்டைக் கணக்கை தன்னார்வமுடன் இல்லாதொழிப்பாராயின் அத்துடன் குறைந்தபட்சம் ஒரு முதனிலைக்

கணக்காவது எஞ்சியிருக்குமாயின் இல்லாதொழிக்கப்பட்ட அட்டைக்கு அறவீடு செய்யப்பட்ட கட்டணங்களின் விளைவாக நிகழ்ச்சித்திட்டத்தில் திரண்டிருக்கும் எவையேனும் புள்ளிகள் அவரது பெயரில் எஞ்சியிருக்கும் அட்டைக் கணக்கிற்கு மாற்றப்படலாம்.

## 11. பொது

11.1 அடிக்கடி நிகழும் பிரயாணி அல்லது அடிக்கடி நிகழாத பிரயாணி சன்மானங்களை மீட்டுப் பெறுவதிலிருந்து விளையும் எத்தன்மையதுமான இயல்பினதான ஏதேனும் நட்டத்திற்கான பொறுப்பை வங்கி ஏற்கமாட்டாது.

11.2 வங்கி அவசியமானதென அது கருதும் ஏதேனும் நேரத்தில் இடைநிறுத்தலாம் அல்லது முடிவுறுத்தலாம். அத்தகைய விடயத்தில் வங்கி அனைத்து அட்டை உறுப்பினர்களுக்கும் முன்னறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

11.3 நிகழ்ச்சித்திட்ட நியதி நிபந்தனைகளை ஏதேனும் நேரத்தில் மாற்றுவதற்கான உரிமை வங்கிக்குண்டு.

11.4 பங்கேற்கும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டத்திற்குப் புள்ளிகளை மாற்றுதல் உட்பட நிகழ்ச்சித்திட்டத்தில் புள்ளிகளை ஈட்டுதல் அல்லது சன்மானங்களை மீட்டுப்பெறுதல் தொடர்பில் மோசடி அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படுவதன் விளைவாக திரண்ட புள்ளிகள் பறிமுதல் செய்யப்படுவதுடன் அட்டை உறுப்பினரின் நிகழ்ச்சித்திட்டக் கக்கும் இல்லாதொழிக்கப்படலாம்.

11.5 நிகழ்ச்சித்திட்டத்திற்கான தகுதி அல்லது புள்ளிகளை அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றுதல் உட்பட சன்மானங்களின் திரள்வு அல்லது அவற்றை மீட்டுப்பெறுதல் தொடர்பிலான எல்லா வினாக்களும் அல்லது பிணக்குகளும் வங்கியால் அதன் ஏக தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

11.6 நிகழ்ச்சித்திட்டக் கணக்கு கைமாற்றத்திற்குரியதல்ல.

11.7 வங்கி குறிப்பிட்டவொரு நியதியை அல்லது நிபந்தனையை வலுவுக்கிடத் தவறுதல் வங்கியால் அந்த நியதி அல்லது நிபந்தனை விட்டுவிடப்பட்டதாக அமையமாட்டாது.

11.8 அட்டை உறுப்பினரின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கொன்றில் திரண்டிருக்கும் புள்ளிகள் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள ஏதேனும் சன்மானத்திற்கு மீட்டுப் பெறப்பட்டதும் புள்ளிகள் பங்குபற்றும் அடிக்கடி நிகழும் பிரயாணி நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு கைமாற்றுதல் உட்பட அவற்றை மீளளிக்கப்படவோ அல்லது அட்டை உறுப்பினரின் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிற்கு திரும்பவும் கைமாற்றப்படவோ முடியாது.

11.9 நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சன்மானம் ஒன்றாக பெறப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பிலான ஏதேனும் பிணக்கு அட்டை உறுப்பினர்களுக்கும் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்கிய சேவைத் தாபனத்துக்குமிடையில் தீர்த்துக்கொள்ளப்படும். அத்தகைய பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கான அல்லது அந்த பிணக்கிற்கான பொறுப்பெதனையும் வங்கி ஏற்கமாட்டாது.

11.10 உறுப்பாண்மை சன்மானங்கள் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து வழங்கப்படும் சலுகைகளைப் பற்றி காலத்துக்குக்காலம் நேரடியாக அனுப்பப்படும் நேரடி அஞ்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அட்டை உறுப்பினர்க் உடன்படுகின்றனர்.

11.11 குறிப்பிட்டவொரு கொடுக்கல்வாங்கல் பிணக்கிற்குட்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது ஏதேனும் காரணத்திற்காக திருப்பிப் பொறுப்பிக்கப்படும் பட்சத்தில் அல்லது செயல்மாற்றம் செய்யப்படும் பட்சத்தில் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் செயல்மாற்றம் செய்யப்படும்.

11.12 குறிப்பிட்டவொரு கொடுக்கல்வாங்கல் நிறைவேற்றப்பட்டு புள்ளிகள் மீட்டுப் பெறப்பட்ட பின்னர் பிணக்கு/கொடுக்கல்வாங்கல் செயல்மாற்றமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து அத்தகைய கொடுக்கல்வாங்கலின் பேரில் கணக்கின்மீது மீட்டுப்பெறப்பட்ட மேலதிகப் புள்ளிகளுக்குச் சமமான ரூபாவை கடன் அட்டைக் கணக்கிற்கு அல்லது அந்தந்த அட்டை உறுப்பினரால் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியுடன் பேணப்படும் வேறு ஏதேனும் கணக்கிற்கு அறவீடு செய்வதன்மூலம் அறவிடும் உரிமை வங்கிக்குண்டு.

11.13 தனது சொந்தத ˙தற்றுணிபின்பேரில் வேறு ஏதேனும் பற்றுறுதியுடன்/சன்மானத்துடன்/அனுகூலத்துடன் இணைக்கும் உரிமை வங்கிக்குண்டு.

11.14 சன்மானப் புள்ளிகளைச் சேர்த்துத் திரட்டுதல் தொடர்பில் அல்லது மீட்டுப்பெறும் கட்டளைகள் தொடர்பில் மோசடி அல்லது அத்தகைய ஏதேனும் எத்தனிப்புகளின் விளைவாக அட்டை பிடித்து வைக்கப்படுவதற்கு/இல்லாதொழிக்கப்படுவதற்கு மேலதிகமாக திரண்ட சன்மானப் புள்ளிகள் பறிமுதல் செய்யப்படலாம்.

11.15 வாடிக்கையாளர் ஒருவர் தமது அட்டைக் கணக்கை இல்லாதொழிக்கத் தீர்மானிப்பாராயின் அவரால் ஈட்டப்பட்ட எல்லாப் புள்ளிகளும் பறிமுதல் செய்யப்படும்.

11.16 நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ஏதேனும் பிணக்கு எழும் பட்சத்தில் வங்கியின் முடிவே தீர்க்கமானதாகும்.

11.17 www.americanexpress.lk என்னும் இணையத்தளத்தில் நிரற்படுத்தப்பட்ட உறுப்பாண்மைப் பங்காளர் தாபனத்தை முன்னறிவித்தலின்றி நிகழ்ச்சித்திட்டத்தின்போது ஏதேனும் நேரத்தில் சேர்த்துக்கொள்ளுவதற்கான அல்லது அப்புறப்படுத்துவதற்கான உரிமை வங்கிக்குண்டு.

## 12. <u>ஆளும் சட்டம்</u>

இந்த நியதி நிபந்தனைகள் இலங்கைச் சட்டங்களால் ஆளப்படுகின்றன.